DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 108/2021

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Father's/Husband's Name : | பொன்னையாதேவர் |
| Village | : மேக்கிழார்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) சர்வே எண்.1472/3B ல் 44.5 செண்ட் நிலத்திற்கும், சர்வே எண்.1473 புதிய சர்வே எண்.1473/4 ல் 59.5 செண்ட் நிலத்திற்கும் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் சர்வே எண்.1472/3B (1 வது லக்க சொத்தை பொறுத்து மட்டும் தான் இந்த பிரதிவாதிகளுக்கு தாவா என்றால் 2 லக்க சொத்திலும் பிரச்சனை செய்கிறார்கள். சர்வே எண்.1472/3B ல் 1 ஏக்கர் 10 செண்டிற்கும், சர்வே எண்.1473/2 ல் 12 செண்டும் அதில் உள்ள கிணற்றில் 6 ல் 1 பங்குக்காகவும் என் மீதும், மற்றும் 8 நபர்கள் மீதும் விளம்புகை மற்றும் நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.21/2022 என்ற வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஆஜராகி நானும் எதிர்வாதம் செய்து வருகிறேன்.

2) சர்வே எண்.1472/3B ல் மொத்தம் உள்ள 1 ஏக்கர் 10 செண்டில் 44.5 செண்ட் நிலத்திற்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி சர்வே எண்ணில் 44.5 செண்ட் நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் தற்போதுமாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண்.1472/3 என்பது சர்வே எண்.1472/3B ஆக எவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.1473/2 ல் உள்ள கிணறு வகையறாவிற்காக நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு எழுத படிக்கத் தெரியாது. 1 ம் பிரதிவாதிக்கும் அவரது கணவர்

மக்காளிக்கும் எழுத படிக்கத் தெரியுமா என்றால் 1ம் பிரதிவாதிக்கு ஓரளவிற்கு தெரியும், அவரது கணவர் பற்றி தெரியவில்லை.

3) எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சர்வே எண்.1472/3ல் 1 ஏக்கர் 10 செண்டு மற்றும் சர்வே எண்.1473ல் 23 1/2 செண்ட் நிலத்தையும் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரும் சேர்ந்து சண்முகவேல் என்பவரிடம் கிரையம் வாங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிரையத் தொகைக்காக எனது தந்தையிடம் 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் ரூ.2000/– கடனாக வாங்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக தான் 1ம் பிரதிவாதியும் அவரது கணவர் கிரையம் வாங்கிய அதே தேதியில் எனது தந்தை பெயருக்கு வா.சா.ஆ.2 ஒத்தி பத்திரம் எழுதி கொடுத்திருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஒத்தி பத்திரத்தில் வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சொல்லியுள்ள சொத்து விபரம் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.2 ஒத்தி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மொத்த சொத்திற்கும் இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் 44.5 செண்ட் நிலத்திற்கு தான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர்த்து எனது அப்பா பெயரில் வேறு பல சொத்துக்களும் இருக்கிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரிடம் மேற்படி கடன் தொகைக்காக ஈடு கடன் பத்திரம் எழுதுவதாக சொல்லி மோசடியாக ஒத்தி பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் கடன் தொகையின் வட்டிக்காக தாவா சொத்தை எனது தகப்பனாரின் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 07.06.1976ம் தேதியே எனது தந்தையிடம் வாங்கிய கடன் தொகையை 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த தேதியிலிருந்து தாவா சொத்தை 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன்.

5) பணத்தை திரும்ப செலுத்திய பிறகு பல முறை 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் எனது தந்தையிடம் இரசீது எழுதி கொடுத்து கேட்ட போது அவர் மறுத்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் மக்காளி கடந்த 09.10.1976ம் தேதி இறந்துவிட்டார் என்றால் தேதி தெரியவில்லை, ஆனால் எனக்கு

சிறு வயது இருக்கும்போதே இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டதாலும், எனது தந்தை இரசீது எழுதி தர காலம் கடத்தியதாலும், தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் வசம் இருந்ததாலும் இநத் பிரதிவாதிகள் எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 1வது லக்க சொத்தான 44.5 செண்ட் நிலத்திற்கு எனது தாயார் பெயரில் பட்டா இருக்கிறது என்றால் 2 லக்க சொத்துக்களுக்கும் எனது தாயார் பெயரில் பட்டா இருக்கிறது.

6) சர்வே எண்.1472/3B ல் 0.18.0 ஏர்ஸிற்கு தான் எனது தாயார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது சுமார் 44.5 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். சர்வே எண்.1472/3B ல் மொத்தம் உள்ள 1 ஏக்கா 10 செண்டிற்கும் எனது தாயார் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா 1வது லக்க சொத்தில் 44.5 செண்ட் நிலத்தை பொறுத்து 1ம் பிரதிவாதியும், மக்காளியும் எனது தாயாருக்கு கிரையப் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். கிரையம் வாங்காத சொத்திற்கு மோசடியாக எனது தாயார் பெயரில் பட்டா வாங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல, அனுபவத்தின் பேரில் பட்டா வாங்கினோம். சர்வே எண்.1472/3B ல் பிரதிவாதிகள் போர்வெல் அமைத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல, நான் தான் போர்வெல் அமைத்துள்ளேன். பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ள நிலம் மற்றும் போர்வெல்லை எனது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) பெருமாள் தேவர் எனது அப்பா பொன்னையாத்தேவரின் தாய்மாமா என்றால் சரிதான். கடன் தொகையை திரும்பி செலுத்திய பிறகும் இரசீது போட்டுக் கொடுக்காமல் எனது தந்தையும், அவரது தாய் மாமா பெருமாள்தேவரும் கூட்டு சேர்ந்து 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்தது போல் மோசடியாக ஒரு கிரைய உடன்படிக்கை வா.சா.ஆ.4 உற்பத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரின் கையொப்பமும் வேறு நபர்களை வைத்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடன் தொகையை திருப்பி செலுத்தாமல் பெருமாள் தேவருடன் எதற்காக கிரைய உடன்படிக்கை எழுதி கொண்டீர்கள் என்று எனது தந்தை 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரை மிரட்டினார் என்றால் சரியல்ல.

எனது தந்தையே கிரையம் வாங்கி கொள்வதாகத் தான் சொன்னார். அதன் பிறகு பெருமாள் தேவர் கிரையம் வாங்காததால் எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார். பெருமாள் தேவருக்கு வா.சா.ஆ.4 ஆவணப்படி கொடுக்கவேண்டிய ரூ.3000/-ஐ எனது தந்தை கொடுத்துவிட்டதாகவும், அதனால் தாவா சொத்ததை தனக்கு கிரையம் கொடுக்க வேண்டும் என்று பிரதிவாதிகளை மிரட்டி வந்தார் என்றால் சரியல்ல.

8) தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 10 செண்ட் நிலமும் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்தது வந்ததால் மேற்படி பேச்சு வார்த்தையை விட்டு விட்டார்கள் என்றால் சரியல்ல. கடந்த 10.12.2020ம் தேதி பிரதிவாதி வங்கியில் கடன் வாங்க முயற்சி செய்த போது தான் எனது தாயார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது அவர்களுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. தவறாக மாற்றம் செய்யப்பட்டிருந்த பட்டாவை ரத்து செய்யக்கோரி பிரதிவாதிகள் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மனுவை விரைவாக விசாரிக்க வேண்டி பிரதிவாதி தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.16786/2021 என்ற மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து விசாரணைக்காக 26.10.2021ம் தேதி எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணை தான் வருவாய் கோட்டாட்சியரின் விசாரணைக்காக எனது தாயாருக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணை நகல் என்றால் சரிதான். அந்த அழைப்பாணை நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) மேற்படி விசாரணை நடவடிக்கைகளை தடுப்பதற்காக தான் இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல, பிரதிவாதி மிரட்டியதால் தாக்கல் செய்தேன். தாவா சொத்தில் 1976ம் ஆண்டு முதல் அனுபவம் செய்வதை காட்டும் விதமாக அனைத்து வருடங்களுக்காக கிஸ்தி இரசீது தாக்கல் செய்துள்ளோ என்றால் என்னிடம் இருக்கும் இரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன். வா.சா.ஆ.7 ல் ஆவணத்தில் முதல் 2 இரசீதுகளும் ஒரே பசலி ஆண்டிற்காக 19.04.1990ம் தேதி செலுத்தப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள மற்ற இரசீதுகள் எனது தந்தை பெயரில் உள்ள மற்ற சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட கிஸ்தி இர சீதுகள் என்றால் சரியல்ல. தவறான பட்டாவின் அடிப்படையில் 1990ம்

ஆண்டு மட்டும் 2 இரசீதுகளை போட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல, அனைத்து வருடங்களுக்கும் போட்டிருக்கிறோம்.

10) தாவா சொத்தை தொடர்ந்து அனுபவம் செய்து வருவதாகவும் அதனால் தாவா சொத்தில் எனக்கு எதிரிடை பாத்தியம் ஏற்பட்டிருப்பதாகவும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி BSNL நிறுவனத்தில் அதிகாரியாக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை 2ம் பிரதிவாதி நல்ல முறையில் பராமரித்து வருவதால் அவருக்கு பணத் தேவை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 2020ம்ஆண்டு 1ம் பிரதிவாதி என்னிடம் ரூ.200000/- பணம் கேட்டார் என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல, கேட்டார்.1973ம்ஆண்டு பிரதிவாதிகள் கிரையம் வாங்கி யசொத்தில் அவர்கள் அத்துமீறி நுழைய வேண்டி அவசியம் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1976ம் ஆண்டிலிருந்து இன்றுவரை தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல, நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். எனது தாயார் பெயரில் மோசடியாக ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையில் தாவா 1வது லக்க சொத்து சம்பந்தமாக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 01.09.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.09.01 18:12:05 +0530

District Munsif,
Aundipatti.